இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 16 | திகதி : 16.10.2022 | விலை : 50.00

# ஆசியத் திருஅவை இளையோரின் திருஅவையாக உள்ளது

-திருத்தந்தை -

Journeying Together as Peoples of Asia

FABC ஆசிய ஆயர் பேரவைகள்

ஒரே மாதிரியாக செயல்படுவதல்ல திருஅவை மாறாக, ஒவ்வொரு தலத்திரு அவைகளின் தனித்தன்மையை மதிக்கின்ற உலகளாவிய திருஅவை எனவும், இத்திருஅவையில் ஆசியா, ஏழைகள் மற்றும் இளையோரின் திருஅவையாகவும், கலந்துரையாடும் திரு அவையாகவும் திகழ்கின்றது எனவும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒக்டோபர் 12 முதல் 30ஆம் தேதி வரை, தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொங்கில் Baan Phu Waan மேய்ப்புப்பணி நிலையத்தில், 50வது ஆண்டு நிறைவு நிகழ்வைத் தொடங்கியுள்ள ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு அனுப்பிய காணொளிச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை. ஊழ்வினை வாழ்விலிருந்து, தகுதியான மனித வாழ்விற்கு, ஆசியாவில் உள்ள இளையோர் விழித்தெழுந்து வருகின்றனர் எனவும், கலாசார வேறு பாடுகள் கொண்ட சமூகங்கள் உண்மையான மக்கள் சமூகங்களாக விழித்தெழுந்து வருகின்றன என, ஆசிய ஆயர்கள் எடுத்துரைப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார், திருத்தந்தை.

இத்தகைய விழித்தெழுதல்தான், ஆசியத் திருஅவையை ஏழைகள், இளையோர் மற்றும் பிற சமய உடன்பணியாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளும் திருஅவை என உறுதியாக அழைக்கின்றது எனவும், ஆசியாவை அதிக மக்கள் தொகையுள்ள.

☞ 02

## பொற்தடத்தில் நற்குருக்கள்



அருட்பணி
T.E. தேவராஜன்



அருட்பணி
ஜேக்கப் நீக்கிலஸ்



அருட்பணி
எட்வின் சவுந்தரநாயகம்

இறைபணி பொதுப்பணி இணைத்து
இருபணியும் ஒரு சேர உழைத்து
இடர்பல வரினும் எதிர்த்து
இறைவார்த்தையால் இயேசு காவியமாய் உதித்து
பணிக்குருத்துவத்தில் விதையாய் உங்களை உடைத்து
பணி வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் நிலைத்து
பொன் விழாக் காணும் பொற் குருக்களே
மூவிராசாக்கள் போல் மூவீரும் வாழ்க
இயேசுவைத் தேடி அன்று
இயேசுவாகவே ........
வால்வெள்ளியைப் பார்த்து அன்று
வால்வெள்ளியாகவே ........

வாழ்வதற்காக அல்ல
வெல்வதற்காகவே தேவ அழைப்பு
பணி பெற அல்ல
பணி புரிதலே உண்மைக் குருத்துவம்
நீங்கள் சூடிய இம்மகுடங்கள்
பொன்னொளிர் வீசுதே
இன்று காண

பொன் சூடிய குருத்துவக் கிரீடம்
வைரம் பவளம் முத்து என
நூறத்தனை பலன் ஈந்து
திருஅவை ஒளிர்ந்திட
நீடிய நலத்துடன்
வற்றாத இறையருள் வளத்துடன்
வாழ்க வாழ்கவே!

## போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்



யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை தீவிரமாக அதிகரித்து சமூகத்தில் பெரும் தீமையாக அது வளர்ந்து வருகின்றது. அதனைத் தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் அழைப்பு விடுத்துள்ளார். மேலும் போதைப் பொருள் பாவனையால் அன்றாடம் எத்தனையோ இளைஞர் யுவதிகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவிகள் அடிமையாகிப் போவதுடன் பலர் தற்கொலை செய்வதையும் இன்னும் பலர் நோய்வாய்ப்படுவதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

☞ 02

## நாவற்குழி வரவேற்பு அந்தோனியார் திருச்சுரூபம் திறந்து வைப்பு

நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கபட்டுவந்த வரவேற்பு அந்தோனியார் திருச்சுருபத் திறப்பு விழா கடந்த 04ஆம் திகதி நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அந்தோனியார் திருச்சுரூபத்தை ஆசிர்வதித்துத் திறந்து வைத்துத் திருப்பலியைத் தலைமை யேற்று ஒப்புக்கொடுத்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களின் நிதிப்பங்களிப்புடன் பங்குத்தந்தை அருட்திரு ஞானறூபன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் வரவேற்பு அந்தோனியார் திருச்சுரூபம் அழகாக அமைக்கப்பட்டுக் காட்சி தருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## புதுமைமாதா ஆலய நுழைவாயில் திறந்து வைப்பு







யாழ். புதுமை மாதா ஆலயம் அமைக்கப்பட்டதன் 400வது யூபிலி ஆண்டை சிறப்பிக்கும் முகமாக ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட நுழைவாயில் கடந்த 02ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. பங்குத் தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ ஜெபரட்ணம் அடிகள் ஆலய நுழைவாயில் வளைவைத் திறந்துவைத்து ஆலய வரலாற்றுத் தகவல்கள் பொறிக்கப்பட்ட கல்லினையும் திரை நீக்கம் செய்து வைத்தார். அத்துடன் நுழைவாயிலுக்கான நினைவுக்கல்லை யாழ் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. யோ. யோ. மவுலிஸ் அடிகள் திறந்து வைத்தார்.

## அமதிகளின் ஆசிய, ஓசானியத் தலைவரின் ஆலோசகராக இயூஜின் அமதி அடிகள்

அமலமரித்தியாகிகள் சபையின் ஆசிய மற்றும் ஓசானியப் பிராந்தியத்தின் உயர் தலைவருடைய ஆலோசகராக அமலமரித் தியாகிகள் சபையின் வட மாகாண முதல்வர் அருட்பணி இயூஜின் பெனடிக்ற் அடிகள் நியமனம் பெற்றுள்ளார்.



உயர் தலைவருடைய ஆலோசகராக நியமனம் பெற்றுள்ள இவர் வருகின்ற 6 வருடங்களுக்கு இப்பணியை ஆற்றவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## போதைப்பொருள் பழக்க அடிமைத்தனத்திலிருந்து எம் சமூகத்தைப் பாதுகாப்போம்

பழக்க அடிமைத்தனம் (addiction) என்பது ஏதாவது ஒரு பழக்கம் தொடர்பில் அளவுக்கு அதிகமான ஈடுபாடு கொண்டிருத்தலைக் குறிக்கும். பலசமயங்களில் உடலளவிலும், உள்ளத்தளவிலும் இத்தகைய பழக்கங்களில் தங்கியிருத்தலையும் இது குறிக்கும். போதைப்பொருள் பாவனை, மதுபானம் அருந்துதல், சூதாட்டம், புகைத்தல் அல்லது புகையிலை பிடித்தல் போன்றவற்றில் ஏற்படக்கூடிய பழக்கங்கள் இத்தகையவை ஆகும். சில பழக்கங்கள் தீங்குதரும் பின்விளைவுகளைத் தரக்கூடியவையாக இருப்பினும், அவற்றினால் கிடைக்கும் திருப்தி காரணமாக, தொடர்ந்து குறிப்பிட்ட பழக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒரு மூளைச் சமநிலையற்ற தன்மை பழக்க அடிமைத்தனமாகும்.

மருத்துவத்தில் பழக்க அடிமைத்தனம் என்பது, உடலின் சாதாரண தொழிற்பாடுகளுக்கு, போதைமருந்து போன்ற ஏதாவது ஒருபொருளில் தங்கியிருக்கும் நிலையைக் குறிக்கிறது. இப்பொருள் திடீரென மறுக்கப்படும்போது உடலில் சில தனித்தன்மையான அறிகுறிகள் தோன்றுகின்றன. பொருட்களைத் தவறாகப் பயன்படுத்தி உட்கொள்ளுவதனால் மட்டுமன்றி மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்ளுவதனாலும் இந்நிலை ஏற்படலாம். மருந்துகள் மற்றும் உட்கொள்ளும் பொருட்கள் தொடர்பில்மட்டுமன்றி அளவுமீறிய கணினிப் பழக்கம், கையடக்கத் தொலைபேசிப் பாவனை முதலியனவும் பழக்க அடிமைத்தனத்தை உண்டாக்கக்கூடும். இந்தப் பழக்க அடிமைத்தனம் ஒருவருடைய உடல்நலம், உளநலம், சமூக வாழ்க்கை போன்றவற்றைப் பாதிப்பதுடன், ஒரு நோய்நிலையாகக் கருதப்படக் கூடியதாகும். இருப்பினும் இவ்வகையான பழக்க அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு, சாதாரண, வளமான வாழ்க்கையைத் தொடருவதற்கான சில வினைத் திறனான மருத்துவ முறைகளும் உள்ளன.

போதைப் பாவனையாளர்களை ஆரம்பத்திலேயே கண்டு உணர்ந்து அவர்களைப் பாதுகாப்பது இன்றைய சமூகப் பொறுப்பாகும். போதைப்பாவனையாளர் வாழ்வியல் மாற்றங்கள் ஊடாகவே நாம் அவர்களை இனம்காண முடியும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான அறிகுறிகள் நபருக்கு நபர் மாறுபடும். பொதுவாக, உடல்ரீதியான அறிகுறிகள், மனரீதியான அறிகுறிகள், சமூகரீதியான அறிகுறிகள் என அறிகுறிகள் மூன்று விதமாகத் தென்படும்.

உடல்ரீதியான அறிகுறிகள் சிலருக்கு ஆரம்பத்தில்தான் தவறுசெய்கிறோம் என்ற குற்ற உணர்ச்சி இருக்கும். எனவே, பெற்றோரின் கண்பார்த்துப் பேசுவதைத் தவிர்ப்பார்கள், மணம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக சூயிங்கம் மெல்லுவது போன்ற புதிய பழக்கங்களைச் செய்வார்கள். சாப்பிடுவதில், தூங்குவதில் நிச்சயம் மாற்றம் தென்படும். தூக்கத்திலும் மிகப் பெரிய மாறுதல் இருக்கும். அதாவது, சில போதைப்பொருட்களை எடுத்தால் மூளைதூண்டப்பட்டு, உற்சாகமாகவே இருப்பார்கள். தூங்கவும் மாட்டார்கள். சிலபோதைப் பொருட்கள் அளவுக்கு மீறிய தூக்கத்தைக் கொடுக்கும். அன்றாட வேலைகளைச் செய்யமுடியாத அளவு சோர்வாகக் காணப்படுவார்கள். மனரீதியான அறிகுறிகள் போதைப் பொருள்களுக்கு மிகவும்தீவிரமாக அடிமையாகிவிட்டார்கள் என்றால், அந்தப்பொருட் கிடைக்காத நிலையில் பதற்றம், மனச்சோர்வு, மாயத்தோற்றம், மாயக்குரல் கேட்பது போன்ற உணர்வுகள் ஏற்படும். அதனுடன் வலிப்பு, வாந்தி போன்ற அறிகுறிகளும் தென்படலாம். வீட்டில் ஆவேசப்படுவது, வன்முறையில் ஈடுபடுவது, அதீத அழுகை போன்றவை ஏற்படலாம்.

போதைப் பழக்கம் என் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. நான் இப்போது நினைத்தாலும் உடனே இதை நிறுத்திவிட முடியும் என்று நினைப்பார்கள். ஆனால், அவர்கள் நினைப்பது போன்று அதைநிறுத்தும்திறன் அவர்களுக்கு இருக்காது. இன்றைக்கு அந்தப்பொருளைப் பயன்படுத்தவே கூடாது என்று முடிவெடுப்பார்கள். பிறகு, ஒருமுறைமட்டும் பயன்படுத்தலாம் என்று நினைப்பார்கள். பிறகு, இரண்டு முறையாக அது அதிகரிக்கும். பின்பு கணக்கே இல்லாமல் சென்றுவிடும். ஏதாவது பிரச்சினை வந்தால் அந்தப் போதைப்பொருளை நோக்கி ஓடுவார்கள். அதை எடுத்தால்தான் இந்தச் சூழலை என்னால் கையாள முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

**சமூக அறிகுறிகள்**

தினமும் அம்மா, அப்பாவுடன் சேர்ந்துதான் சாப்பிடுவார்கள் என்றால் திடீரென ஒதுங்கி தன் அறையிலேயே சாப்பிடுகிறேன் என்பார்கள். வீட்டில் பெற்றோர், உடன் பிறந்தவர்கள் இருக்குமிடத்தில் உட்காருவது, பேசுவதைத் தவிர்ப்பது, நண்பர்களுடன் தங்கப்போவதாகக் கூறி வீட்டில் அதிகநேரம் இருப்பதைத் தவிர்ப்பது, போதைப்பொருளை வாங்குவதற்கு அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்வது அல்லது திருடுவது, நண்பர்களிடம் கடன் கேட்பது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். தங்களுக்குப் பிடித்த விளையாட்டு, ஆன்லைன் கேம்ஸ் போன்ற பொழுதுபோக்கு விஷயங்களை மொத்தமாகக் கைவிட்டு விடுவார்கள்.

எனவே போதைப்பொருள் பெரும் தீமையிலிருந்து எம்மையும் எமது சந்ததியரையும் பாதுகாப்போம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# குரு பிரதீபா பிரபா விருது பெறும் அதிபர்



ஆசிரியர் மற்றும் அதிபர்களை மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டம் - 2022 இன் கீழ் கல்வி அமைச்சினால் உலக ஆசிரியர் தினத்தன்று நடாத்தப்பட்ட குரு பிரதீபா பிரபா மதிப்பீட்டு விழாவில், பாராட்டுக்குரிய அதிபர்களாக வடமாகாணத்திலிருந்து ஐந்து அதிபர்கள் தெரிவாகினர்.

அவர்களில் ஒருவராக யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மேரி அஞ்சலிக்கா AC அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இவ் விருதைப் பெற்றுக்கொண்டார். அவர்களைப் பாதுகாவலன் வாசக நெஞ்சங்களாகிய நாம் வாழ்த்தி நிற்கின்றோம்.

# நாவாந்துறைப் பங்கில் இளையோர் பந்தி ஆரம்பம்

யாழ் மறைமாவட்டத்தின் நாவாந்துறை புனித மரியாள் ஆலயத் திருஅவையில் புனித வின்சென் டி போல் இளையோர் பந்தியானது கடந்த 25.09.2022 அன்று மத்தியசபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி செ.நேசநாயகம் அடிகளாரதும் நாவாந்துறை புனித மரியாள் பந்தியின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி எம்.யேசுரெட்ணம் அடிகளாரதும் ஆசீருடன் ஆரம்பிக்கப்பட்டது.

25 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பந்தியானது புனித மரியாள் இளையோர் பந்தி என நாமம் சூட்டப்பட்டு அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வில் மத்திய சபைத் தலைவி யா.மரியநாயகி, செயலாளர் இ.ரவிசங்கர் ஆகியோருடன் புனித மரியாள் பந்தி நிர்வாக உறுப்பினர்களும் கொய்யாத்தோட்டம் அருளாளர் பிரட்றிக் ஓசானம் இளையோர் பந்தி நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக இளையோருக்கான மத்தியசபை நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் ஊறணி உதவிப் பங்குத் தந்தையுமாகிய அருட்பணி A. நியூமன் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி ஜேம்ஸ் அரியநாயகம் திரேசம்மா** அவர்கள் கடந்த 12.10.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும், மற்றும் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

# போதைப் பொருள் எனும் அரக்கனை வேரோடு களைவோம்.

**யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்கப் பொதுநிலையினர் கழகம்**

யாழ் மாவட்டத்தில் போதைப்பொருள் வர்த்தகமும், அதனைப் பயன்படுத்துவோரும் மிகஅதிகமாகக் காணப்படுவதனால் ஏற்படும் தீமைகள் அதிகரித்து வருகின்றமையால் எமது தமிழ் மக்களைக் குறிப்பாக இளையோரைப் பாதுகாக்க வேண்டியது எமக்கு முன் வைக்கப்படும் பாரியபொறுப்பும் கடமையுமாக உள்ளது. எனவே இத்தீமைக்குஎதிராகஅனைவரும் ஒருமித்துக் குரல் கொடுக்கமுன்வருவோம்.

போதைப்பொருள் வர்த்தகம் வடபகுதியில் தாராளமாக நடைபெறுவதால் இளையோரும், குடும்பத் தலைவர்களும் உடல், உளரீதியாகப் பாதிக்கப்படுவதோடு குடும்பங்களும் சீரழிந்து போகின்றன. போதைப் பொருள் கொள்வனவிற்குஅதிகபணம் செலவுசெய்ய வேண்டியிருப்பதனாலும் விலைவாசி ஏற்றம், பொருட்கள் தட்டுப்பாடுகாரணமாகவும் குடும்பப் பொருளாதாரம் நலிவடைந்து போகின்றது. அத்துடன் போதைக்கு அடிமையானவர்கள் பணத் தட்டுப்பாடுஏற்படும் போது கொள்ளைகளிலும், வழிப்பறிகளிலும், ஈடுபடுகின்றனர். சிலவேளைகளில் கொலையும் செய்யமுற்படுகின்றனர். போதையில் வாகனங்களைச் செலுத்துவதனால் விபத்துகளுக்குக் காரணமாவதோடு உயிரிழப்புக்களும்

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

# ஆசிய ஆயர் பேரவைகள் ....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

அதிலும் குறிப்பாக இளையோரை அதிகமாகக் கொண்ட கண்டம், பல்வேறு கலாசாரம் மற்றும் சமூகங்களின் இல்லம் என, தனது ஆசிய திருத்தூதுப் பயணத்தின்போது திருத்தந்தை புனித ஆறாம் சூபவுல் அவர்கள் குறிப்பிட்டதையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். பொதுநிலையினர் தங்களது திருமுழுக்கை, பொதுநிலையினராகத் தங்களின் செயற்பாடுகளை மதித்து உண்மையான மக்கள் சமுகமாகமாறத் தொடங்கியுள்ளனர் எனவும் எடுத்துரைத்துள்ள திருத்தந்தை, குறிப்பிட்ட தனித்துவத்தின் அடிப்படையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கருத்துப் பரிமாற்றம் மற்றும், உடன்பிறந்த உணர்வுடன் ஆற்றும் செயல்கள் வழியாகத் தன்னுடைய உடனிருப்பை வெளிப்படுத்த விரும்புவதாகவும் கூறியுள்ளார். அக்டோபர் 12ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடைபெறும் இப்பேரவையில் ஆசியஆயர்கள் தங்களது மறைப்பணியில் இடம்பெறும் சவால்கள் மற்றும், ஆசியத் தலத்திரு அவைப் பணிகளுக்கான புதிய பாதைகள் போன்றவற்றைக் குறித்தும் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை ஆயர்கள் பேரவையிலிருந்தும் ஆயர்கள் இம் மாநாட்டில் பங்கெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# புனித வின்சென் டி போல் திருநாள்

யாழ்ப்பாணம் மறைமாவட்ட புனித வின் சென் டி போல் மத்திய சபையின் ஏற்பாட்டில் அனைத்துப் பந்திகளின் ஒத்துழைப்புடன் புனித வின்சென் டி போலின் திருவிழா குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 25.09.2022 அன்று மிக எளிமையாகவும் பக்திபூர்வமாகவும் கொண்டாடப்பட்டது.

“ஏழ்மை என்பது பாவமல்ல, ஏழ்மையானவர்கள் சபிக்கப்பட்டவர்களும் அல்ல, அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” திருவிழாத் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்கொடுத்த யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தமது மறையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைபவ ரீதியாகக் கொடிகள் ஏற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திருவிழாத் திருப்பலியில் தொடர்ந்து அவர் கூறுகையில், ஏழைகளைத் தான் இயேசு பெயர் சொல்லி அழைத்திருந்தார். இறைவன் இவ்வுலகில் இருந்து ஏழைகளை அகற்ற ஒருபோதும் கூறவில்லை. பசியையும் இல்லாமல் செய்யவில்லை. ஆனால் ஏழைகளைப் பராமரிக்கின்ற பணியைச் செய்ய அழைக்கின்றார். நீங்கள் இப் பணியை முன்வந்து செய்து கொண்டு இருக்கின்றீர்கள். ஆனால் இப் பணியைச் செய்யும் நீங்கள் ஏழைகள். உங்களுக்குக் கீழ் உள்ளவர்கள் என்று மட்டும் ஒருபோதும் நினைக்கக்கூடாது எனத் தெரிவித்தார்.

மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி செ.நேசநாயகம் அடிகளாரும் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி A.J.யாவிஸ் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

இத் திருப்பலிக் கொண்டாட்டத்தில் மத்திய சபை நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய பந்திகளின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் இந்நிலைபற்றி ஏற்கனவே கூறியிருப்பதைச்சுட்டிக்காட்டி இதனைநாம்பார்த்துக் கொண்டிருக்காது அனைத்து மதத் தலைவர்கள், அரச ஊழியர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் எல்லோரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகப் போராடி எமது எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க முன்வர வேண்டு மெனவும் குறிப்பிட்டுள்ளார்.

# "கனவு காண்போம்"




கரைவையூர்ச் செல்வம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி....)

**மாபெரும் சீர்திருத்தவாதி**
(A Great Reformer)

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தை, சங்கத்தின் மறுமலர்ச்சிக் கனவை, சங்கத்தின் தூரத்துப் பார்வையை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அக் கனவை நனவாக்க திருஅவையின் தலைமைத் துவத்தை ஏற்ற கணத்தே இருந்து போப் பிரான்சிஸ் ஒரு சீர்திருத்தத்தைத் தொடக்கி வைத்தார். அவரது தலைமைத் துவக் காலத்தில் இதுவரை போப் பிரான்சிஸ் தனது செயல்களாலும், உரைகளாலும், பேட்டிகள் மூலமும், எழுத்தாலும் பயணங்களாலும் பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். வார்த்தைகளால் மட்டுமன்றி வாழ்க்கையாலும் இம்மாற்றங்களைக் கொண்டுவரும் பொழுது ஒரு நம்பகத்தன்மை, ஓர் உண்மைத்தன்மை வெளிப்படும். வெளிப்படுகிறது. யாருமே தலையிட முடியாத, தொடவே முடியாத வத்திக்கானின் ஆட்சி மன்றத்தைத் (curia) துணிவுடனும், உறுதியுடனும் சீர்திருத்திய பெரும் பணியை போப் பிரான்சிஸ் செய்துள்ளார். கிறிஸ்துவுக்கு எதிர்ச்சான்று பகரும் வகையில் வாழ்ந்த வத்திக்கான் ஆட்சிமன்றத்தை இவர் மாற்றியுள்ளார். களைகளை அகற்றியுள்ளார். மேற்கொண்டு இக் களைகள் வளராமல் இருக்கவும் வழி செய்துள்ளார். குருத்துவக் கலாசாரமும் குருமரபினத் துவமும் இந்த ஆட்சி மன்றத்தில் இனியும் இருக்கக்கூடாதென்று திடமாக இருந்தார். இருக்கின்றார். திருஅவையின் ஆட்சி மன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு குருத்துவம் தேவையில்லை என்று உறுதியோடு சொன்னார். இது ஒரு புதுமையான சிந்தனை. ஒரு நீண்ட பாரம்பரியத்தை உடைத்துவிட்டார். சொன்னது மட்டுமல்ல, செயலிலும் காட்டினார். அந்த ஆட்சிமன்ற உறுப்பினராக ஆண்களும், பெண்களும் கலந்த பொதுநிலையினரையும், பெண் துறவிகளையும் இல்லறத்தோரையும் இம்மன்றத்தினுள் உள்வாங்கியுள்ளார்.

ஆட்சிமன்றத்தைப் பரவலாக்கி, பொதுநிலையினருடனும் ஆட்சிப் பொறுப்பை பகிர்ந்து கொண்டார். இது, திருஅவையில் ஒரு பாரிய புரட்சி.

இவ்வாறு ஒரு பாரிய சீர்திருத்தத்தைச் செயற்படுத்திய போப் பிரான்சிஸ், இலத்தீன் மொழியாளர்களை, அவர்களுடைய நடைமுறைகளை ஏன் சீர்திருத்த முடியவில்லை? என்றொரு கேள்வி எழலாம். இவர்களில் கைவைப்பது திருவழிபாட்டு முறையில் கைவைப்பது போலத் தோன்றும். பழமைவாதிகளின் ஒட்டுமொத்த எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி வரும். பழமைவாதிகளின் உண்மையான முகங்களைப் புரியாத மக்களிடையே ஓர் அகப்பிளவு உருவாக இந்தப் பழமைவாதிகள் துணியலாம்.

இப்பேர்ப்பட்ட காரணங்களால் போப் பிரான்சிஸ் இதுவரை ஓரளவு அடக்கி வாசித்தார். இருப்பினும், இந்த இலத்தீன் மொழிக் காரருடைய உண்மையான முகத்தை, இரண்டாவது வத்திக்கான் சங்க முடிவுகளை ஏற்றுக் கொள்ளாமையை தங்கள் பதவிகளையும், அதிகாரத்தையும் அத்துடன் வரும் ஒரு சொகுசான வாழ்க்கை முறையை விட்டுவிட விரும்பாமையை போப் பிரான்சிஸ் நன்கே அறிந்திருந்தார். அதனாலேயே, தனது தலைமைத்துவத் தொடக்க காலத்திலிருந்தே இவர்களுக்குத் தனது ஆதரவை அவர் வழங்கவில்லை.

இவருக்கு முன்பிருந்த பதினாறாம் பெனடிக்ற் இந்த இலத்தீன் மொழிக் காரர்களுக்குத் தனது ஆதரவை வழங்கினார். இலத்தீன் மொழியிலும் பழைய சடங்கு முறையில் திருவழிபாட்டைத் தொடர்ந்து நடத்த அனுமதி அளிப்பது போல பதினாறாம் பெனடிக்ற் அவர்களின் அறிக்கை summonm Pontificum ( இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு ஆடித்திங்கள் ஏழாம் நாள்) அமைந்தது. இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஆடித்திங்கள் பதினாறாம் திகதி போப் பிரான்சிஸ் வெளியிட்ட traditionis custodes அறிக்கை முன்னர் கொடுத்த அனுமதியை வெகுவாகக் குறைப்பதாகவே அமைந்தது. ஆயினும், இலத்தீன் மொழியாளர் தணிவதாக இல்லை. அண்மையில் ஆனிமாதம் இருபத்து ஒன்பதாம் நாள் (2022)வெளிவந்த போப் பிரான்சிஸ் அவர்களுடைய அறிக்கை Desideri Desiderati இலத்தீன் மொழியாளர்களுக்கும் அத்துடன் வரும் பரிவாரங்களுக் கும் முற்றுப்புள்ளி வைப்பதுபோல அமைந்துள்ளது. இவ்விடத்தே வாசகர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகின்றேன். மொழியல்ல பிரச்சினை. அந்த மொழியுடன் கூடி வரும் அத்தனை பரிவாரங்கள் தான் பிரச்சினை.

**முன்னை நாள் சனாதிபதி**

இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், சோவியத் ஒன்றியத்தின் முன்னாள் சனாதிபதியான மினசல் சேர்கேயேவிச் கொர்பச்சேவ் தனது தொண்ணூற்று ஓராவது வயதில் சென்ற ஆவணித் திங்கள் முப்பதாம் நாள் (2022) மரணமடைந்தார். இவரை நாமேன் நினைவுகூர வேண்டுமென்று வாசகர்கள் கேட்கலாம். இவர் இந்த நூற்றாண்டின் மாபெருந் தலைவருள் ஒருவர். உலகின் முதலாவது பொதுவுடமை நாடான சோவியத் ஒன்றியத்தில் தேர்தல் மூலம் பதவிக்கு வந்த முதலாவது சனாதிபதி. இவர், பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து, இரண்டு முகாம்களாகப் பிரிந்த உலகை ஒன்றாக்கியவர். படையை வளர்த்த சோவியத் ஒன்றியம் பொருளாதாரத்தை வளர்க்காமல் வறுமையில் வாழ்ந்த நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்தார். நீண்டகால ஆப்கானிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர். ஊடகச் சுதந்திரத்தையும் பேச்சுச் சுதந்திரத்தையும் தனது நாட்டினுள் அனுமதித்தார்.

வட அமெரிக்காவுடன் பல ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு, அணு ஆயுதங்களைக் குறைக்க ஒப்புக் கொண்டவர். அவர் சோவியத் நாடுகளில் தோன்றிய ஒரு பெரும் சீர்திருத்தவாதி. சமாதானத்தை விரும்பியவர். அதற்காகச் செயற்பட்டவர். 1990ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டவர். கோர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் நண்பனானார். இதற்கு இவர் கொடுத்த விலை...? உள்நாட்டில் வெறுக்கப்பட்டார். ஒரு வல்லரசாக விளங்கிய சோவியத் ஒன்றியத்தின் இனத்தவராக உள்நாட்டில் ஒதுக்கப்பட்டார். இதை இங்கு எழுதுவதற்கு முக்கிய காரணம்: நன்மைகளைச் செய்யும் பொழுது ஒரு சாரார் போற்றி வரவேற்பார்கள். இன்னொரு சாரார் வெறுத்து ஒதுக்குவார்கள். இன்று போப் பிரான்சிஸ் இதனை நன்கே அனுபவித்து வருகின்றார். கோடிக்கணக்கான மக்கள் நூற்றுக்கணக்கான ஆயர்கள், ஆயிரக் கணக்கான குருக்கள், பல கர்தினால்கள் போப் பிரான்சிஸ் அவர்களுடைய சீர்திருத்தப் பணிகளை வரவேற்கிறார்கள். திருஅவைக்கு வெளியேயும் பல மக்கள், பல அரசியல் சமூகத் தலைவர்கள் அவரை வரவேற்கிறார்கள். அதேவேளை திருஅவைக்குள் சிலர் அவரைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். அவருடைய சீர்திருத்தங்களை எதிர்க்கிறார்கள்.

**பந்திக்கு வாருங்கள்**

அனைத்து மக்களும் பந்தியில் அமரவேண்டுமென்பது போப் பிரான்சிஸ் அவர்களுடைய அழைப்பு. அதுவே அவரது கனவு. இங்கு 'பந்தி' என்ற சொல், திருவழிபாட்டுத் திருவிருந்தையே குறிப்பிடுகின்றது. இந்தச் சிந்தனையை, நற்செய்திகளின் மனப் போக்கை போப் பிரான்சிஸ் உள்வாங்கியுள்ளார். அவருடைய சீர்திருத்தத்தின் மையப் பொருள் இதுவென்று துணியலாம். அனைவரையும் உள்வாங்க வேண்டும்.

அவ்வாறாயின், ஏன் போப் பிரான்சிஸ் தன்னை எதிர்ப்போரை இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியை மறுப்போரை உள்வாங்கவில்லை? உள்வாங்கவே விரும்புகிறார். அவர் பகிரங்கமாகவே அழைப்பொன்றை விடுத்துள்ளார். "என்னை விமர்சியுங்கள். அதேவேளை வாருங்கள் அமர்ந்து உரையாடுவோம்" என்று தங்களைத் தாங்களே எதிரிகள் ஆக்கிக் கொண்ட இந்த இலத்தீன் மொழிக்காரர், பழமை விரும்பிகள், இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்கு முன்பிருந்த ஆரோக்கியமற்ற திருச்சபையை நிலைநாட்ட முனைபவர்கள் அந்த அழைப்பை ஏற்று அந்த உரையாடல் பக்கமாகக் காலடி வைத்ததாக எவ்விடத்திலும் பதிவேதும் இல்லை. இப்பேர்ப்பட்டவர்கள், போப் பிரான்சிஸ் அவர்களுடைய "ஒன்றாய்ப் பணிப்போம்" என்ற கனவில் இணைவார்களா? முரணான பாதையிலேயே பயணிக்க முனைவார்கள், இவர்கள், போப் பிரான்சிஸ் அவர்களைப் பகிரங்கமாக விமர்சிப்பது மட்டுமல்ல, கற்களையும் தாராளமாக அவர்மீது எறிகிறார்கள். தாங்கள் கிறிஸ்துவுக்கு எதிர்ச்சான்று பகிர்வது இவர்களுக்குத் தெரியவில்லையா? அன்றேல் தெரிய விரும்பவில்லையா? தூங்குபவனை எழுப்பலாம். ஆனால், தூங்குவது போல நடிப்பவனை எழுப்ப முடியாது.

கும்பகர்ணன் வதைப் படலத்தில் இராவணன் கும்பகர்ணனைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு வருகின்றன. இராவணன் எந்தச் சூழலில் இக்கூற்றைச் சொன்னான் என்பது குறிப்பிடல் வேண்டும். இராமனுடனான போரில் இராவணன் பின்னடைவு கண்டான். இந்தத் தருணத்தில்தான் கும்பகர்ணனின் போர்த்திறமைகள், ஆற்றல்கள் அவனுக்குத் தேவைப்பட்டன. ஆனால், கும்பகர்ணன் இராமனின் போர் உத்திகளையும், திறமைகளையும் நன்கே அறிந்து வைத்துள்ளான். அப்படிப்பட்ட ஒரு போர் வீரனை எதிர்ப்பது மடமைத்தனம் என்பதையும் கும்பகர்ணன் புரிந்து கொண்டான். அதேவேளை, தான் கோளையல்ல என்பதை வெளிக்காட்ட விரும்பாத கும்பகர்ணன், தூங்குவது போலப்பாசாங்கு செய்தான். அவனை எழுப்புவது கடினம்தானே? மனம்மாறி, சிந்தனையை மாற்றி, புதுவாழ்வு வாழ விரும்பாதவனை, மறுப்பவனை அழைத்துக் கொண்டே இருக்கலாம். இறுகிய மனத்துடையோனையும், உடைந்த இதயம் கொண்டோனையும் மனம் மாற்ற முனைவது தூங்குவது போலப் பாசாங்கு செய்யும் கும்பகர்ணனை எழுப்புவதற்குச் சமம். இப்படிப்பட்ட கும்பகர்ணர்கள் எம்மத்தியில் நிறைந்திருப்பது எங்கள் அனுபவ அறிவு. அதேவேளை, இவர்கள் மனம்மாற வேண்டுமென்று வாய்கிழியக் கதறுவார்கள்.

**அச்சுறுத்தல்**

இலத்தீன் மொழிக்காரர், பழமை விரும்பிகள் இரண்டாவது வத்திக்கான சங்கத்து மறுமலர்ச்சியை மறுப்பவர்கள் பதினாறாம் பெனடிக்ற் அவர்களின் ஆட்சியில் அவரது ஆதரவு இருந்ததினால், ஓரளவு கொடிகட்டிப் பறந்தார்கள். ஆனால், அதே இரண்டாவது வத்திக்கான் சங்கத்து தூரத்துப் பார்வையை, நற்செய்திகளின் உண்மைத்தனத்தை மையமாகக் கொண்டு கனவு காணும் போப் பிரான்சிஸ் அவர்களும், அவரது பாரிய கனவும் இவர்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகிவிட்டது. சடங்குகளுக்குப் பின்னால், பழமைவாதத்தின் பின்னால், தங்களுடைய பதவி ஆசைகளையும் அதிகார மோகத்தையும், அடக்கி ஆழ விரும்பும் தங்கள் எண்ணங்களையும் தக்க வைக்க ஆசை கொண்ட சுயநலன் கொண்ட இவர்கள், இரண்டாவது வத்திக்கான் சங்கத்து முடிவுகளை எதிர்ப்பதற்கு இவர்களிடம் ஆதாரபூர்வமான வாதங்கள் எவையும் கிடையாது. போப் பிரான்சிஸ் இவர்களுக்கு ஓர் அச்றுத்தலானமைக்கு இதுவுமொரு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

(கனவு வளரும்)

# காவலன் கலசம்

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)**



ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. யாழ்ப்பாணத் திருத்தூது முதல்வராக (1868-1883) கொழும்பு திருத்தூது முதல்வராக (1883-1887) பின்னர் கொழும்பு அதி உயர் மறை மாவட்ட பேராயராக (1887 - 1892)

**அழைத்தல் வாழ்வு**

இவர் முதல் நன்மை பெற்ற அன்றுதான் தான் இறைவனால் ஒரு திருத்தூது வாழ்வுக்கு அழைக்கப்படுவதை முதன்முறை உணர்ந்தார். இவ்வழைத்தலுக்குத் தாராள மனத்துடன் தமது

அருட்பணி S.V.B.மங்களராஜா

சம்மதத்தையும் வெளிப்படுத்தினார். அன்றிலிருந்து இவர் ஒரு முற்றிலும் மாறியபையனாகப் பணிவும் கட்டுப்பாடும் உள்ள, ஆழ்ந்து சிந்தித்து செயலாற்றக் கூடிய பையனாக மாறினார். துவக்கத்தில் அவரது சகோதரி மட்டுமே தமது சகோதரன் ஒரு குருவாக வரவிரும்புவதாக அறிந்துகொண்டார். தமது விருப் பத்தை தமது தந்தைக்கு வெளிப்படுத்தத் தேவையான துணிச்சல் இவருக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. ஒருநாள் இவர் தமது துணிச்சல் எல்லாவற்றையும் வரவழைத்துக்கொண்டு தமது தந்தையின் அறைக்குச்சென்று ஒருவாறாக தாம் குருமடம் செல்லவிருப்பதாகக்கூறி முடித்தார். இதனை முற்றிலும் எதிர்பாராத, முற்றிலும் வித்தி யாசமான மனநிலை கொண்டதந்தை சத்தமாக ஒரு ஏளனச் சிரிப்புச் சிரித்தவாறே தமது மகனை அறையை விட்டு வெளியேறுமாறு எதுவும் பேசாது சைகை யால் பணித்தார். பின்னர் தமது மகனுக்குப் படிப்பில் அதுவரை இருந்து வந்த ஆர்வமின்மை பற்றி நன்கு அறிந்தவராக பல்கலைக்கழக முதல் நிலைப் பரீட்சையில் சித்தி பெற்றுச் சான்றிதழுடன் வரும் போதுநான் உனது விருப்பத்திற்கு மறுப்புச்சொல்ல மாட்டேன் என்றார். இத்துடன் அத்தந்தை தனது மகனது வினோத மான விருப்பத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டதாக எண்ணினார். ஆயினும் ஏணஸ்ற் பொன்ஜீன் தமது மூத்தசகோதரியுடன் கலந்தாலோசித்து இருவரும் பரீட்சைக்குமிகவும் பொறுப்புடனும், கடின உழைப்புடனும் தயாராகத் தீர்மானித்தனர். அதேவேளையில் ஏணஸ்ற் எப் போதும் தமது பங்குத்தந்தையுடன் தொடர்பில் இருந்தார். அவரும் எப்போதும் ஏணஸ்ற்றுக்கு வேண்டிய வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளை யும் வழங்கி வந்தார். தகுந்த ஆயத்தங்களுடன் ஏணஸ்றும் அவரது சகோதரியும் பரீட்சையை எழுதிச்சித்தியும் அடைந்தார்கள். அத்துடன் ஏணஸ்ற் சிறப்புச்சித்தி பெற்றார். தற்போது ஏணஸ்ற் துணிவுடன் தமது சான்றிதழுடன் தந்தையிடம் சென்றார். தந்தை தனது மகனின் சாதனை குறித்துப் பெருமைப்பட்டு மகிழ்ச்சியடைந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது குருவாக வரவேண்டுமென்ற தமது மகனின் மாறாத முடிவு பற்றிக்கோபத்துடனிருப்பதாகக் காட்டிக்கொண்டார். எனினும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவேண்டு மென்ற தமது உண்மைத் தன்மையை நிரூபித்தவராக குருமடம் செல்வதற்குத் தமது சம்மதத்தையும் ஆசீரையும் வழங்கினார்.

(தொடரும்...)

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

### செபம்

**189.அருள்நிறை மரியே என்ற செபத்தின் முதல்பகுதிக்கு சொந்தக்காரர்கள் யாவர்?**

அருள்நிறை மரியே என்ற செபத்தின் முதல் பகுதிக்கு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட கபிரியேல் தூதரும் புனித எலிசபேத்தம்மாளும் சொந்தக்காரர்கள் ஆவார்.

**190. அருள்நிறை மரியே என்ற செபத்தின் இரண்டாம் பகுதியை உருவாக்கியவர் யார்?**

தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்ட இறைவனின் திரு அவை இரண்டாம் பகுதியை உருவாக்கியது.

**191.ஏன் நாங்கள் அருள்நிறை மரியே என்ற செபத்தை அடிக்கடி செபிக்க வேண்டும்?**

இறைமகனின் மனுவுடலேற்பை நினைவுபடுத்து வதற்கும் இறைவனின் தாயான புனித கன்னிமரியாவுக்கு வணக்கம் செலுத்தவும் நாம் அடிக்கடி அருள்நிறை மரியே என்ற செபத்தைத் தொடர்ச்சியாகச் செபிக்க வேண்டும்.

**192. அருள்நிறை மரியே என்ற செபத்தைத் தொடர்ச்சி யாக நாம் செபிக்க வேண்டியதற்கு வேறு காரணம் உண்டா?**

எல்லா வேளைகளிலும் சிறப்பாக எமது இறப்பு நேரத்திலும் பாவிகளாகிய எங்களுக்காக மன்றாடும்படி தேவதாயை வேண்டி அருள்நிறை மரியே என்ற செபத்தை நாங்கள் தொடர்ச்சியாகச் செபிக்கவேண்டும்.

**193. ஏன் கத்தோலிக்க திரு அவை அன்னை மரியாவுக்கு உயர்ந்த வணக்கத்தைச் செலுத்துகிறது?**

இறைவனின் அமல உற்பவத் தாயாகக் கன்னிமரியா விளங்குவதால் கத்தோலிக்கத் திரு அவையானது அவருக்கு உயர்ந்த வணக்கத்தைச் செலுத்துகிறது.

**194. எவ்வாறு கன்னிமரியா இறைவனின் தாயாக விளங்குகிறார்?**

கன்னிமரியா இறைவனின் தாயாக விளங்குகிறார். எவ் வாறெனில் அவரிடமிருந்து மகனாகப் பிறந்த இயேசுக்கிறிஸ்து வெறுமனே மனிதன் மாத்திரமல்ல அவர் உண்மையாகவே இறைவனாகவும் இருக்கிறார்.

(தொடரும்...)

# குடும்பங்களை வடிவமைக்கும் சிற்பிகள் திருக்குடும்ப சபைக் கன்னியர்கள்

1947 ஆம் ஆண்டு பண்டத்தரிப்புத் திருக் குடும்பக் கன்னியர்மடம் ஆரம்பிக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு 75 ஆவது பவள விழாவைக் கொண்டாட ஆயத்தமாகும் இக்காலத்தில் "நல்ல குடும்பங்களை வடி வமைப்பதில் இத்திருக்குடும்பக் கன்னியர் கள் ஆற்றிய, ஆற்றுகின்ற பணிகளை ஒரு மீள்பார்வை செய்ய முயற்சிக்கின்றேன்.

பண்டத்தரிப்பு முற்றுமுழுதான பசுமையான நிலமென்றோ முற்றிலும் வரட்சியான நிலப்பகுதியென்றோ சொல்ல முடியாது. இக்கிராமத்திற்கும் சில கிலோ மீற்றர் தூரப்பகுதியில் சண்டிலிப்பாய் வழி யாக 'வழுக்கை ஆறு' மெதுவாக ஓடி, அராலிக்கட லில் விழச்செல்லும் காலத்தில், பசுமை யாகவும் ஏனைய காலங்களில் சற்று வறட்சியாகவும் காணப்படும். தென் னையும் பனையும் போட்டிபோட்டு நீண்டு வளர்ந்து, பூத்துக் காய்த்து பலன்களை அள்ளித்தரும். அவைகளின் இலைகளில் பைங்கிளியும் 'கூக் கூ' பாடும் குயிலும் ஏனைய பறவை இனங்களும் தெம் மாங்கு பாடும். வண்டினங்கள் சுற்றிச் சுற்றி வலம்வந்து ரீங்காரம் பாடும். தென் றல்காற்று இதமாக வீசி, நம் உடல்களை வருடிச்செல்லும்போது, தெவிட்டாத ஒரு இன்ப உணர்வுகளை மனித மனங்களுக் குள்ளும் உருவாக்கும். வாடைக் காற்று சற்றுவெப்பத்துடன் தூசிப் படிமங்களை அள்ளிக்கொண்டு வந்து, பூமித்தாயின் புனிதமான பகுதிகளைக் களங்கப்படுத்தும். வாழையும் கமுகும் பப்பாசி மரங்களும் ஏனைய பயிர்பச்சைகளும் கண்ணுக்குள் பசுமைப் புரட்சியைக் காட்டிக் கதை




பேசும். வயலும் வயல் சார்ந்த இடங்களும் பயிர்கள் கதிராகி முற்றிப் பலன் தரும் காலத்தில் நாணத்தால் வளைந்து வளைந்து நிற்கும் நங்கைகள் போன்று நர்த்தனங்கள் பல காட்டி நிற்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பண்டத் தரிப்பில் 'பதிகொண்டு எழுந்தருளி இருக் கின்ற பத்திமா அன்னையின் தரிசனமும்' என்றும் அவர் தம் மகன் இயேசுவிடம் பரிந்துபேசி வற்றாத ஊற்றுப்போன்று பொழி யும் ஆசீர்வாதங்களும் பக்தர்கள், இறை மக்கள் நெஞ்சங்களை ஆட்கொண்டு இயேசுவை ஆழமாக அன்பு செய்ய அழைத்துச் செல்லும். இரு மதங்கள் இங்கு இருப்புக் கொண்டாலும் மதபேத மற்ற சகோதரத்துவம் 'நாம் அனைவரும் கடவுளின் மக்கள்' என்று வருவோருக்கும் போவோருக்கும் கட்டியம் கூறும்.

வெள்ளைமனம் கொண்ட அருட்பணியாளர்கள், துறவிகளின் தூய சேவை தியாகம் நிறை அர்ப்பணத் துடன் அன்றும் இன்றும் காலத்தின் தேவைகளுக்கேற்ப பல பரிமாணங்க ளுடன் விரிவடைந்து கொண்டே போகின் றது. 'வரலாற்றுப் பதிவுகள்' என்பது ஒரு கால ஓட்டங்களில் நடந்த நிகழ்வுகளை யும், இன்னும் ஒவ் வொருநாளும் நடக்கும், குறிப்பிடத்தக்கவை என்று கூறுபவைகளையும் அடுத்த சந்ததி யினருக்கு சத்தங்கள் சங்கடங்கள் இல் லாமல் பேசிக்கொண்டேயிருக்கும் ஓர் சிறந்த ஊடகம் ஆகும். இந்தவகையில் மதிப்புக்குரிய ஆயர் அல்பிறட் கியோமர் (அ.ம.தி) யாழ் மறைமாவட்டத்தைப் பரி- பாலனம் செய்தகாலத்தில் பண்டத்தரிப்புப் பங்கில் அருட்பணியாளராக இருந்த அருட்பணி.ஹென்றி ஜெலான் என்ற அமலமரித்தியாகி, அக்காலத்தில் திருக்

அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்

குடும்ப சபையினருக்கு யாழ்ப்பாணத்தில் தலைவியாக இருந்த சலோமைத் தாயா ரிடம் பண்டத்தரிப்புக் கிராமத்தில் இறை பணி, கல்விப்பணி என்பவற்றைச் செய்ய திருக்குடும்பக் கன்னியர் சிலரை அனுப் பும்படி கேட்டுக்கொண்டார். காலத்தின் அறிகுறிகளை அவ்வவ்போது ஆவியின் ஒளியில் உய்த்துணர்ந்த சலோமைத் தாயார் பண்டத்தரிப்பில் பணிபுரிய சில அருட்சகோதரிகளை அனுப்ப முன்வந்தார்.

1947 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 22 ஆம் நாள் இச்சகோதரிகள் பண்டத்தரிப்பில் பணி புரிய தம் தடங் களை இம்மண்ணில் ஆரம்பித்தனர். முதல் குழுத்தலைவியாக அருட்சகோதரி வெரோணிக்கா பேதுருப்பிள்ளையும் முதல் பாடசாலை அதிபராக அருட்சகோதரி றெஜினா கூஞ்ஞேயும் இன்னும் சில அருட்சகோதரிகளும் தம் வாழ்வையும் பணியையும் முழுமையான அர்ப்பணிப் புடன் பகிரத்தொடங்கினர். 1947 களில் இக்கிராமம் மிகவும் பின்தங்கிய நிலை யிலேயே இருந்தது. கல்வி பெறும் சந்தர்ப் பங்கள் மிக அரிதாகவே இருந்தன.

வறுமையும் வளமையும் சமு தாயத்தில் நீயா? நானா? என்று போட்டி போட்டுக்கொண்டிருந்தன. இந்தக்காலத் தில்தான் ஆன்மீக தாகமும்' 'வீரத்துவமும்' கொண்ட இப்பெண் துறவிகள் வீடு வீடாகச் சென்று, குடும்பங்களைத் தரிசித்து அவர் களுடன் உறவாடி நல்ல வார்த்தைகள் சொல்லி நல்ல விழுமியங்களை அவர் கள் வாழ்வில் வளர்த்து, எங்கும் எதிலும் பரவியிருக்கும் மெய்ப்பொருளை நம்ப வும் அவரைத் தம் வாழ்வில் தேடவும் தம் அன்பான பிரசன்னத்தாலும் வார்த் தைகளாலும் வழிகாட்டி ஊக்குவித்தனர். புவியின் தட்பவெப்ப நிலைகளிலும் பல சவால்களுக்கு முகங்கொடுத்து, 'ஆரோக் கியமான கவின் நிலையை குடும்பங்க ளில் உருவாக்க' கல்வியையும் மறைக் கல்வியையும் 'தொடருறுமுறையில் கற்பித்தனர்.

(தொடரும்...)

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்
காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

# தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

16

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

*– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்*

## அத்தியாயம் 8



**கிறிஸ்தவ ஆலயங்களின் பொருளென்ன? நோக்கமென்ன? யூத மக்களின் ஜெருசலேம் ஆலயத்தை, உரிமையுடன் - என் பிதாவின் வீடு - என்று அழைத்த இயேசு, தன்னுடைய இன்றைய சீடர்களின் ஆலயத்தைப் பற்றி என்ன கூறுவார்?**

தன்னலத்திற்காக அல்ல, எங்களுடைய இனத்தின் உண்மையான விடுதலைக்காக. உண்மையான நீதியுடன் வாழவே நாங்கள் விரும்புகின்றோம். ஆகையினால் நாங்கள் என்னதான் நடந்தாலும் எந்த ஆரியர்தான் கூத்தாடினாலும், எங்களுடைய காரியத்திலேயே கண்ணாயிருக்க வேண்டும். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு என்று எமது மூதாதையர் கூறியபடி எங்களைப் பற்றிய காரியத்திலே நாங்கள் கண்ணாயிருக்க வேண்டும்.

### 8.4 பண்பாட்டு மயமாக்குதலை மிகைப்படுத்தி, வாழ்வின் மற்றைய கடமைகளைக் கைவிட்டு விட்டோமா?

சங்கத்தின் இரு முக்கிய அறிவுரைகளைத் தமிழ்க் கிறிஸ்தவர்களும் திருஅவைகளும் போதிய ஆர்வத்துடன் வரவேற்கவில்லை 2ஆம் வத்திக்கான் சங்கம் மற்றைய சங்கங்கள் போல் அல்லாது, முதற் தடவையாக முழு உலகத் திரு அவையின் கூட்டமாக, தனது கவனத்தை, பரந்த தூர நோக்குடன் புதிய உலகின் மத கலாசார சமூக அநீதிகள் அனைத்தையும் உற்று நோக்கியது. இதன் காரணமாக எல்லா ஏடுகளும், விசேடமாக திருஅவை பற்றிய - மக்களின் ஒளி (lumen gentium) இன்றைய உலகில் திரு அவை (gaudium et spes), பிற மதங்களுடன் உறவு

இன்றைய உலகில் (nostra aetatae) ஏடுகள், விசேடமாக பல மதங்களின் தாயக மான ஆசியாவிற்கு, மிகப் பொருத்தமான, பிறமத, சமூகப் பிரச்சினைகளையும் உணர்ந்து, இவ்வேடுகள் வழியாக அறிவுரைகளை வழங்கியது.

இருந்தும் சங்கத்தினால் தூர நோக்குடனும், எமது சூழலுக்கேற்ற பொருத்தமான அறிவுரைகளை ஏராளமாக வழங்கியிருந்தும், தமிழ்த் திரு அவைகள் ஏன் அவைகளை வரவேற்றுப் பயன்படுத்தவில்லை? இன்றும் சரியாக வரவேற்பதாயில்லை. காரணம் என்னவென்று ஆராய்ந்தால் ஒன்று தெளிவாகின்றது.

### 8.5 . உலகச் சூழலின் சோகம் நிறைந்த யதார்த்தங்களுக்கும் உண்மைகளுக்கும் தமிழ்த் திருஅவைகள் அந்நியமாக வளர்ந்து வந்திருக்கின்றன.

எமது திருஅவைகள் கடந்த காலத்தில் பிற மதத்திற்கு எதிரிகளாகவும், சூழலுக்கு அந்நியப்படுத்தப்பட்டவர்களாகவும் வாழ்ந்திருக்கிறோம். ஆரம்பத்தில் நாம் ஐரோப்பிய அந்நியத் தன்மையினால், எம்மைத் தனிமைப்படுத்தி வெளிநாட்டு உதவியுடனும் பண உதவியுடனும் வாழ்ந்து வந்தோம். எமது ஆலயங்களும் வழிபாடுகளும் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வும் மதில்களுக்குள்ளே மறைந்து செயற்படுவது போலாயிற்று. அதனால் மக்களுடைய வாழ்வையும், அவர்களுடைய பிரச்சினைகளையும், அவர்களுடைய ஏக்கங்களையும், அழுகைக் குரல்களையும் கேட்டு, அவைகளுக்கான உதவிகளைச் செய்ய இயலாத அமைப்புக்களாக இருந்து வந்திருக்கின்றோம்.

மனிதர்களுடைய வாழ்வாதார, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்கு உதவி தேடுவதை, அரசியல் என்று போர்வையிட்டு விலகி நடந்தோம். சமூகச் சவால்களைச் சந்திக்காது, விலக்கி நடந்தோம். சிறு பான்மையாகவும் அந்நிய மதமாகவும், பெரும்பான்மை அரசாங்கத்தின் தயவிலே வாழ்பவர்களாக, நடந்திருக்கிறோம்.

ஐரோப்பியத் திரு அவைகளின் உதவியுடன் மனிதாபிமான உதவிகளையே செய்தோம். எமது ஐரோப்பிய கிறிஸ்தவ சகோதரர்களின் உதவிகளைப் பெற்று, எம்மத்தியில் உள்ள வறியோர்க்கு உதவினோம். கறிட்டாஸ், மிசெறெ-யோர் ( caritas, misereor) போன்ற மேல் நாட்டு கிறீஸ்தவ அமைப்புகளின் உதவிகளைப் பெற்று பகிர்ந்தளிக்கும் ஸ்தாபனங்களாக செடெக், கியுடெக் (SEDEC, HUDEC) செயற்பட்டன. இந்த உதவி உள்ளவர் இல்லாதோர்க்கும் குனிந்து பிச்சை போடுவது போலாகும். இதைச் செங்குத்தான தோழமை (vertical solidarity) என்போம். உண்மையில் எங்களிடமிருந்து வேண்டப்படுவது சமாந்தரமான, சகோதரத்துவமான, தோழமை ஆகும். (horizontal brotherly solidarity)

### 8.6. வறுமையிலும் துன்பத்திலும் மீட்புப் பணி செய்த இயேசுவைப் போல், திரு அவைகளும் நடந்து கொள்ள வேண்டும்.

2ஆம் வத்திக்கான் சங்கம் முக்கிய ஏடுகளில் விளங்கப் படுத்தியபடி, விசேடமாகத் திரு அவையைப் பற்றிய -மக்களின் ஒளி - என்ற ஏட்டில், 8ஆம் இல. ஊக்குவித்தபடி, இறைமகன் மனித மீட்பிற்காக, மனிதனானதுபோல்,

திருஅவைகளும் இவ்வுலகில் சகல சூழ்நிலை யதார்த்தங்களிலும் உருவெடுக்க வேண்டும். கிறிஸ்து வறுமையிலும் துன்பத்திலும் மீட்புப் பணியை செய்து முடித்தார். அதுபோல் மீட்பின் பலன்களை மனிதருக்கு வழங்க, திரு அவையும் அதே பாதையில் அடியெடுத்து வைக்கவே அழைக்கப் பெறுகிறது. (Just as God became man through incarnation, so the church is called to in-carnate its if in the realities of the context) சூழலின் உண்மை நிலையில் பிரசன்னமாயிருக்கும்படி அழைக்கப்படுகின்றது.

உலகத்தில் மனித சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினை களை நன்றாகப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டுமாயின், எதிர்ச்சக்திகளை இனங்கண்டு, அவைகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டும்.

(தொடரும்....)

# மோனாலிசாவின் கண்கள்



**அந்த லியனடா டாவின்சியின் கரங்கள் எத்துணை ஆசீர்வதிக்கப்பட்டவை. அவரின் கண்களில் தேங்கிக் கிடப்பது சருகான புன்னகையா அல்லது இன்னமும் வழியாத கண்ணீர்துளியா என்ற பட்டிமன்றத்திற்கும் இன்னமும் பதிலில்லையே.**

**அருட்பணி எஸ்.அஜந்தன்**

நிலவின் முதுகுபோல இன்னமும் இரகசியமாகவே இருக்கிறது அவளின் கண்கள் பேசும் வார்த்தைகளின் அர்த்தங்கள். ஒன்றுமட்டும் உண்மை அவள் கண்கள் மானுடம் வாழும்வரை ஏதோதோ வார்த்தைகளைப் பேசிக்கொண்டே இருக்கும். பூமி வாழும் வரை அவளின் மந்திரப் புன்னகைக்கு மரணமே இல்லை.

மோனாலிசாவின் கண்களின் மயக்கத்தில் இருந்து பூமி இன்னமும் விடுபடவேயில்லை.

ஓவியத்தின் உயிர் அதன் கண்ணில்தானே இருக்கிறது. அந்தக் கண் களை வரைவதில் அத்தனை திறமையும் வெளிப்படுகிறது.

எவ்வளவு அழகான சிலை-யைச் செதுக்கினாலும் அதன் கண் திறப்பதில் உள்ள அழகியல்தானே சிலைக்கு உயிர் கொடுகின்றது.

*ஓவியத்தின் கண்களில் தூரிகை படும் நேரமும், சிற்பத்தின் கண்களில் உளிபடும் வலி நிறைந்த நேரமும்தானே கண் திறத்தல் எனும் அழகான தருணங்களை உருவாக்கி விடுகின்றன.*



ஓவியத்தின் கண்களில் தூரிகை படும் நேரமும், சிற்பத்தின் கண்களில் உளிபடும் வலி நிறைந்த நேரமும்தானே கண் திறத்தல் எனும் அழகான தருணங்களை உருவாக்கி விடுகின்றன.

முள்ளை மிதித்தவன் இரத்தத் துளிகள் நடுவே ஈரமாகப் பெறுகிற அனுபவம் அவரது கைகளில் காய்ந்து போனாலும் இதயத்தில் ஈரம் காய்வதில்லையே.

நெருப்பைத் தொட்டுப் பெறும் அனுபவம் எப்போதும் சுட்டுக் கொண்டு தானே இருக்கின்றது.

இந்தத் தருணங்கள் தான் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் எவ்வளவு அழகான கண் திறத்தல்களை உண்டுபண்ணி விடுகின்றன. அந்தக் கண்கள் திறந்த பிறகு இனி அவன் இன்னொருமுறை அந்த நேற்றைய பக்கத்தில் வாழப்போவதேயில்லை.

வாழ்வு கண் திறக்கும் பல தருணங்களால் ஆனதுதானே.

எனக்கு இரண்டாவது முறையாகவும் டெங்குக் காய்ச்சல் வந்தது. யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். மூன்று நாட்களில் உடம்பு கொஞ்சம் தேறிவிட்டது. தேசிக்காய்த் தண்ணீர் உறிஞ்சிக்கொண்டு சுற்றும் நடப்பதை வேடிக்கை பார்ப்பதைவிட அங்கு செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை என்றே தோன்றியது. கொஞ்சம் சுகமான அனுபவமாகவும் இருந்தது. நாங்கள் எல்லோரும் நினைப்பதுண்டு நாங்கள் தான் வாழ்க்கையை வேடிக்கை பார்க்கின்றோம் என்று. உண்மை என்னவென்றால் வாழ்க்கைதான் எம்மை நீளக் கயிற்றில் நடக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறது. கயிற்றின் நீளம் முடிகிறபோது வாழ்க்கையும் முடிந்து போகிறது.

பயமுறுத்தும் ஊசிகளோடும், கசப்பான மருந்துகளோடும் குறுக்கும் நெடுக்குமாக அலையும் தாதியர்களைத் தாண்டி ஒரு சலசலப்பு என் கண்ணில் பட்டது.

எதிரே ஒரு வயதானவர். மூச்சு எடுக்க அவதிப்பட்டுத் துடித்துக் கொண்டிருந்தார். பார்ப்பதற்கே பாவமாக இருந்தது. அவரின் கண்கள் பிதுங்கி நின்றன. கன்னங்களின் ஓரம் இயலாமையின் வயோதிபக் கண்ணீர்கள் வழிந்து, தலையணையில் விழுந்துகொண்டி ருந்தன. வாழ்க்கையில் என்னிடம் என்னதான் இருக்கிறது? என்று சலித்துக் கொள்ளும் தருணங்கள் நினைவில் வந்தன. ஒரு பெரிய வாழ்க்கையே கையில் இருக்கிறதே. நான் சுவாசித்துக் கொண்டிருக்கிறேனே! நான் உயிரோடு இருக்கிறேனே! இதைவிட வாழக்கை என்னதான் தரவேண்டும். அன்று முதல் தான் சுவாசத்தின் ஒவ்வொரு மூச்சிலும் இன்னமும் உயி-ரோடு இருப்பதற்கு நன்றி சொல்கிறேன்.

இழுத்துக் கொண்டிருந்த அந்த மனிதனின் முகத்தில் செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டிருந்தது. அந்தச் சுவர் ஓரமாய் சுவாசம் காட்டும் கருவி, பீப்... பீப்.... என்ற ஒலியுடன் ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் கருவியில் சுவாச அலைவரிசைகள் மேலும் கீழுமாக அலை அலையாக ஓடிக்கொண்டிருந்தன. செய்வதற்கு ஒரு வேலையும் இல்லை. அந்தக் கோடு-களையே பார்க்கின்றேன். மேலெழுவதும் கீழே விழுவதுமாக மாறி மாறிக் கோடுகள் நகர்ந்தன. என்ன இது இப்படி இருக்கிறது? ஒரு சீராக, நேராக இருந்தால் தானே அழகாயிருக்கும் என சலிக்கிறேன்.

சலிப்போடு பார்த்துக்கொண்டிருக்க கொஞ்சநேரத்தில் நான் எதிர்பார்த்தபடியே மேலும் கீழுமாய் ஏறி இறங்கிய கோடுகள் மறைந்து சீரான அழகான நேர்கோடு வந்தது. 'அப்பாடா' என்று பெருமூச்சு விடுகிறேன்.

அங்கே பதட்டம் தொற்றிக் கொள்கிறது. அந்தத் தாதி மருத்துவரிடம் ஓடிப்போகிறார். மருத்துவர் வருகிறார். அந்த மனிதனின் கை மணிக்கட்டைத் தூக்கிப் பார்க்கிறார். கண் இமைகளைத் திறந்து பார்க்கிறார். திரும்பி நிமிர்கிறார். இவர் இறந்துவிட்டார் எனச் சொல்லி எதிலோ எழுதிக் கையொப்பம் இடுகிறார். அந்த மனிதன் கண்மூடிய தருணம்தான் என் கண்கள் திறந்து கொண்டன.

அந்த இதயத்துடிப்புக் கருவியின் கோடுகள் எழுவதும் விழுவதுமாய் இருப்பதுவரைதான் மனிதன் உயிரோடு இருக்கிறான். எப்போது வாழ்வில் எழுவதும் விழுவதும் நின்று போகிறதோ அப்போது மனிதன் இறந்து விடுகிறான்.

நான் உயிர்வாழ்வதன் அடையாளமே எழுவதும் விழுவதும் மீண்டும் எழுவதும்தானே!

**பத்தாவது முறையாக மண்ணில்
விழுந்தவனைப் பார்த்து பூமி சொன்னது:
நீ ஒன்பது முறை
எழுந்தவனல்லவா?**




# என் கேள்விக்கென்ன பதில்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**அருட்பணி செ. அன்புராசா**

*(சதீஸ், மன்னார்)*

**கேள்வி: ஆண்டவனை அடைய நாம் ஏன் ஆலயம் செல்லவேண்டும்? ஆலய மின்றி ஆண்டவனை அடைய முடியாதா?**

ப: சதீஸ், என் மனத்திலும் இந்தக்கேள்வி சில வேளைகளில் எழுந்ததுண்டு. இதே கேள்வியை ஒருதடவை சுவாமி விவே கானந்தரிடம் உங்களைப் போன்ற என் னைப் போன்ற ஒருவன் கேட்டான். அவரோ அவனிடம், "கொஞ்சம் தண்ணீர் தரு வாயா?" என்று கேட்டார். அவன் சென்று ஒரு செம்பு நிறையத் தண்ணீர் கொண்டு வந்தான். விவேகானந்தர், "நான் தண் ணீர்தானே கேட்டேன். ஏன் செம்பு? செம்பு இல்லாமல் தண்ணீர் கொண்டுவர முடி யாதா?" எனக் கேள்வியெழுப்பினார். தண்ணீர் கொண்டு வந்தவன் குழம்பிப் போனான்! விவேகானந்தர், "தண்ணீர் கொண்டுவரச் செம்பு தேவைப்படுவது போல ஆண்டவனை அனுபவிக்க ஓர் இடம் வேண்டுமல்லவா? அதுதான் ஆலயம்! ஆனாலும், செம்பே தண்ணீர் ஆகிவிடாது! அதுபோல, ஆலயமே ஆண்டவனாகிவிடமாட்டாது! "என்றார். இப்ப, ஏன் ஆலயம் போகவேண்டுமென விளங்குகின்றதா? சதீஸ் அண்ணோய்! இது ஒருபுறமிருக்க, நம் உள்ளங்கள் ஆல யங்கள் ஆகவேண்டும் என்ற இயேசுவின் கூற்றும் இன்னுமோர் ஆழ்ந்த ஆன்மீக வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது.

*(மனோ, யாழ்ப்பாணம்)*

**கே: வாழ்க்கையை நிறைவாக வாழ ஒரு நல்ல ஆலோசனை கூறுவீர் களா?**

ப: மனோ, நிறையக் கூறலாம். நிறை யக் கூறினாலென்ன ஒன்றும் நினைவில் நிற்காது! அதனால், நீங்கள் எதிர்பார்ப்பது போல அண்மையில் நான் படித்த ஒரு கூற்றினை நல்லாலோசனையாகத் தரு கின்றேன்: 'வறுமை வந்தால் வாடக்கூடாது! வசதி வந்தால் ஆடக் கூடாது!'வாடாமலும், அதேவேளை ஆகக்கூட ஆடாமலும் வாழ்க்கையைக் கச்சிதமாக வாழப் பாருங்கள் மனோ!

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: குரங்கு - மனிதன் பற்றி கடந்த வாரம் எழுதியிருந்தீர்கள். குரங்கு மனிதனா? குரங்காகிப் போன மனி தனா? குரங்கிலிருந்து மனிதனா? மனிதக் குரங்கா? எப்படி எடுத்துக் கொள்வது?**

ப: சசி, பயப்படாதீங்க! எப்படி வேண்டு மா-னாலும் எடுத்துக்கொள்ளலாம்! ஏனென் றால், மனிதர்களாகிய நமக்கு எப்படிப் போட்டுப் பார்த்தாலும் அது பொருத்தமாகத் தான் இருக்கின்றது!

*(சந்து, வவுனியா)*

**கே: 'அறகலிய' போராட்டத்தின்போது தங்கள், அன்பு நண்பன் ஆரியசிங் கவுக்கு எழுதிய கடிதங்கள் நூலாக வெளிவருமா? எப்போது?**

ப: சந்து, ஆரியசிங்கவுக்கு எழுதிய கடிதங்களை நூலாக்குங்கள் என்று உங்களைப்போல பலரும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள் ஆனால், தகரத்துக்கு விலைகேட்கும் நாட்டில், தங்கத்தின் விலைசொல்லும் காலத்தில் வாழ்ந்துகொண்டு எப்படி வெளியிடுவது என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கின் றது! எனினும், தங்களின் எதிர்பார்ப்பு விரைவில் கைகூடுமென நினைக் கின்றேன்.

*(றெஜி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால் அது மக்களால் தெரிவு செய்யப்படுகின்றது. ஆனால், நம் முடைய அரசுகள் மக்களின் அபி லாசைஷகளை நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை! மாறாக, அரசில் அங்கம் வகிக்கும் சில தனிநபர்கள் நாட்டின் வளங்களை அநுபவிப்பதா கவே தெரிகின்றது. இதனை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ப: றெஜி, அண்மையில் ஓர் ஆங்கிலக் கூற்றைப் படிக்க நேர்ந்தது. உங்கள் கேள் விக்கான பதிலாக சிலவேளைகளில் அது அமையலாம்: 'நாம் கடனில் இருக்கவேண் டும் என்பதை வங்கியாளர்கள் உறுதிப் படுத்திக் கொள்கின்றார்கள். நாம் நோயில் இருக்க வேண்டும் என்பதனைமருந்து உற்பத்தி நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றன. நாம் போரைத் தொடர வேண்டும் என்பதனை ஆயுத உற்பத்தி யாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றார் கள். நாம் உண்மையை அறியாதிருக்க வேண்டும் என்பதனை ஊடகங்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றன. இவையெல் லாம் சட்டப்படி நடக்கவேண்டும் என் பதை அரசாங்கம் உறுதிப்படுத்திக் கொள்கின்றது!'றெஜி, இன்றைய போக்குப் புரிகிறதா?

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: உலகமயமாக்கலினால் விளைந்த நன்மைகளைவிடத் தீமைகளே அதி- கமானவை எனத் தெரிகின்றது! நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ப: அருள், உலகமயமாக்கல்பற்றி ஒற்றை வார்த்தையில் சொல்வதானால் உலகமே நம் விரல் நுனியில் வந்து நிற்கின்றது. அதாவது, உலகமே ஓர் ஊராக மாறிவிட் டது. அதாவது, ஓர் ஊரிலுள்ள எல்லாரை யும் அவ்வூரிலுள்ள எல்லாருக்கும் தெரிந் திருக்கும். அதுபோல, அவ்வூரைப்பற்றி அவ்வூரிலுள்ள எல்லாருக்கும் தெரிந்திருக் கும்! அதுபோலவே, உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சம்பவமும் மறு கணமே உலகத்தின் எந்த மூலையில் இருப்பவர்களும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் வசதியும் கிடைத்திருக்கின்றது. ஆனால், ஆனால், ஆனால் சிறுசிறு முயற்சி யாளர்கள், சிறுசிறு வியாபாரிகள் சிறுசிறு உழைப்பாளர்கள் - உற்பத்தியாளர்கள், சிறுசிறு கடைக்காரர்கள் காணாமல் போய்கொண்டிருக்கின்றார்கள்! காரணம், பெரும் நிறுவனங்களும் பன்னாட்டு நிறு வனங்களும் புதிய தேவைகளை - 'ஒரு- வகையில் தேவையே இல்லாத தேவை- களை'- உருவாக்கி அத்தேவைகளுக்குத் தாங்களே தீனியையும் உற்பத்திசெய்து தங்களின் அடிமைகளாக மக்களை ஆக்கி வைத்திருக்கின்றார்கள். மேலும், தனிமனிதர்களின் - ஒருசிலரின் கை- களில் பணம் குவிக்கப்படுகின்றது. அதனால், ஒரு நாட்டினுடைய அத்தனை மக்களின் ஒட்டுமொத்தத் தலைவிதியும் சில மனிதர்களால் - சில நிறுவனங்களால் மட்டும் தீர்மானிக்கப்படுகின்றது! இது பெரும் ஆபத்து! இது பெரும் அபாயம்! இது பெரும் அடிமைத்தனம்! புரிகின்றதா அருள்?

*(அனு, யாழ்ப்பாணம்)*

**கே: அண்மையில் நீங்கள் கண்டு வியந்த ஒரு விடயத்தைக் கூறமுடி யுமா?**

ப: அனு, 'உலகில் அதிகமான உண் மைகள் மதுக்கடைகளில் மது அருந்திச் சொல்லப்படுகின்றது. அதிகமான பொய்கள் நீதிமன்றத்தில் புனித நூல்களின் மேல் ஆணையிட்டுச் சொல்லப்படுகின்றது' என்ற ஓஷோவின் கூற்று என்னைத் திகில- டையச் செய்தது! இக்கூற்றின் தாற்பரியம் தெரிந்திருந்தாலும் அதனை வாசித்துச் சிந்தனையில் இருத்தியபோது, அது மிகவே உறைத்தது. உலுப்பியெடுத்தது!

*(மேரி, மன்னார்)*

**கே: தாங்கள் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது என்று சிலர் தங்களைப்பற்றிப் பெரிதாக நினைத் துக் கொள்கின்றார்கள், அப்படியே தங்களைப்பற்றிஏனையவர்களிடமும் சொல்லுகின்றார்கள். இவர்களுக்கு என்ன அறிவுரை கூறலாம்?**

ப: மேரியக்கா, தான் கூவித்தான் விடிந்ததாம் எனச் சேவல் நினைத்ததாம்! இச்சேவலைப்போல நினைக்கின்ற 'சேவ கர்'கள் இருக்கத்தான் செய்வார்கள். நீங்கள் ஆலோசனை வழங்கி அவர்கள் தங்களைப்பற்றிக்கூவித்திரிவதை அல்லது தங்களைவிட்டால் ஆட்கள் இல்லை யென்றுநினைப்பதைநிறுத்தப்போகின்றார் களா? இல்லையே! அப்படியென்றால், சர- சரவென சத்தத்தையெழுப்பும் சருகுகளை விட்டுவிட்டு,அவர்களுக்கு ஆலோசனை கூறி உங்கள் நேரத்தை விரயமாக்குவதை விட்டுவிட்டு, உங்கள் வேலைகளில், பணி களில் கவனத்தைச் செலுத்துங்கள் மேரி!

---

**அர்த்தமுள்ள ஆன்மீகம்**

# நலம் தரும் நம்பிக்கை

**பகுதி 04**

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

நலம் தரும் நம்பிக்கை என்ற தலைப் பின் நான்காவது தொடரை நாம் இன்று தொடர்கிறோம். நம்பிக்கை நலம்தர நாம் இறையுணர்வோடு ஆன்மாவை சிதறடித்துவிடாமல் அதனை இறை- கரம் பற்றி உறுதியோடு நடந்து செல்ல வேண்டும் என்பதை முன்னைய பகுதி களில் பார்த்த நாம், நம்பிக்கையீனத் துக்கு உதாரணமாக ஆதிப் பெற்றோரை யும் நம்பிக்கைக்கு உதாரணமாக இறை வனோடு நடந்த நோவாவையும் பார்த் தோம். இறைவன் ஆதிப் பெற்றோரின் நம்பிக்கைத் துரோகத்துக்குப் பின், பாவப்பட்ட மனித இனத்தின் அழிப்புக்குப் பின் புதிய புனர் பரிமாணம் செய்யப்பட்ட, புதிய உல கிலிருந்து தம்மீது நம் பிக்கை கொண்டவரைத் தெரிந்தெடுக்கிறார். அவர் மூலமாக இறைவன் உலகை வழிநடத்துவதையும், நம்பிக் கையின் மேன்மையை உணர்த்துவதையும் நாம் பார்க்கிறோம்.

இந்த வகையில் ஆபிரகாமைத் தேர்ந்தெடுப்பதையும் நாம் பார்க்கிறோம்.

ஆபிரகாம் எடுத்த எடுப்பிலேயே ஆண்டவரின் அழைப்பை மறு வார்த் தைக்கு இடமின்றி அதையே தம் வாழ் வின் இலக்காகக் கொள்வதை நாம் பார்க் கிறோம். இறைப்பற்றிலும், இறை நம்பிக் கையிலும் துளிகூட விலகாது நடந்தார். ஆபிரகாமின் நம்பிக்கையை இறைவன் அவருக்கு நேர்மையாகக் கருதினார் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. ஊர் என்ற கல்தேயர் நகரில் நின்று ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து வெளிக் கொணர்ந்தார். "ஆபிராம்" என்ற பெயரை "ஆபிரகாம்" என்று மாற்றினார். இறை பற்றுக்கொண்ட அவருடைய இதயத் தைக் கண்டு பல நாடுகளை அவருடைய வழிமரபினருக்குத் தருவதாக உடன் படிக்கை செய்தார்.

இதற்கு மேலாக அவருடைய நம்பிக்கை அவரை "நம்பிக்கையின் தந்தை" என்று உயர்த்தப்படுவதற்கான சம்பவத்தை நாம் பார்ப்போம். கானான் நாட்டில் கூடாரம் ஒன்றில் வசிக்கும் ஆபிர காம் அந்த இடம் தன்னுடைய வழிமரபி னருக்கு உரிமைச் சொத்தாகும் என எதிர் நோக்குகிறார். குழந்தைப்பேறு இல்லாத ஆபிரகாம் - சாரா தம்பதியினருக்கு குழந் தைப்பேற்றை வாக்களித்து வானத்து விண்மீன்களைவிட உன் வழிமரபு பெருகுமென உறுதியளிக்கிறார். தனது தள்ளாத வயதையும் சாராவின் கருப்பை செத்துவிட்ட நிலைவையும் பொருட்படுத் தாமல் இறைவார்த்தையை உறுதியாக நம்பி, நம்பிக்கை தளராமல் பல ஆண்டு கள் காத்திருந்தார்.

அவரது அசையாத இந்த நம் பிக்கை ஈசாக்கு என்ற மகனின் பிறப்பினூ டாகப் பலிக்



கிறது. ஈசாக்கு ஊடாக ஆபிரகாமின் நம்பிக்கை புடமிடப்படுகிறது. தன் ஒரே மகனைப் பலியிடுமாறு கடவுள் அவருக்குக் கட்டளையிடுகிறார். பார்ப் போருக்கு இறைவனுக்கு இரக்கமில்லை என்று எண்ணத் தோன்றினாலும் இதுவே அவருக்கான நம்பிக்கையின் பலப் பரீட்சையாக இருந்தது. கடவுள் இருக்கிறார் பார்த்துக்கொள்வார் என்ற மன உறுதியோடு ஈசாக்கைப் பலியிட முன்வருகின்றார். தலையை வெட்டும் நேரத்தில் இறைவன் அவரைத் தடுத்து, ஈசாக்கை மீண்டும் அவருக்கே கொடுத்து, அவரின் கீழ்ப்படிதலால் மனமகிழ்ந்து, நம்பிக்கையின் தந்தையாக அவரை நிலை நிறுத்துகிறார்.

நாம் இறை நம்பிக்கை குறித்து எந்த நிலையில் இருக்கிறோம்? இறை நம்பிக்கையோடு நடந்து, நிலை வாழ்வு பெறப் படைக்கப்பட்ட நாம், ஆன்மாவை இழந்து, உலக மாயைகளிலே சிக்கி, சொல்லொணாத் துன்ப துயரங்களை நமக்கு நாமே வருவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், நாம் நம் பிக்கையாளர் என்று மார்புதட்டிக்கொள்கி றோம். ஆலயங்களுக்குச் சென்று நாம் கேட்பவை, நாம் நினைத்தபடி, உடனேயே கிடைத்து விடவேண்டுமென்று அடம்பிடிக்கிறோம். அதையே நமது நம்பிக்கையாக எண்ணுகிறோம். நமது தேவைகளைக் கைவிடாத இறைவன் என்பதை மறந்துவிடுகிறோம். அடுத்த நாளே, அடுத்த கணமே போலித் தெய்வங்களிடமும், போலிச் சாமியா ரிடமும் வெற்றிலை, எலுமிச்சம் பழங்களுடன் சென்றுவிடுகிறோம். நம்மை அறியாமலே போலி நம்பிக்கை, மூடநம்பிக்கை, குருட்டு நம்பிக்கை போன்றவற்றில் விழுந்துவிடுகிறோம்.

(தொடர்ச்சி 11ம் பக்.)

## நலம் தரும்....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் விரும்பாத பில்லிசூனியங்களுக்குள்ளும், செய்வினை தீவினைகளுக்குள்ளும், குறிகேட்டல்களுக்குள்ளும் சென்று விடுகின்றோம். இன்று மனிதர்கள் முன் உலக செல்வங்களையும் இறைவனையும் முன் வைத்து எதை நீ நம்புகிறாய் என்று கேட்டால் நாம் இதயபூர்வமாக எதை நம்புவோம்? உலக செல்வங்களின் மீதான நம்பிக்கை இறை நம்பிக்கையைத் தகர்த்துவிடும். பில்லிசூனியம், செய்வினை தீவினைகளை வேதம் அடியோடு வெறுக்கிறது. லேவியர் 19:31 “பில்லிசூனியம் பார்க்கவேண்டாம். குறிகாரனை அணுகவேண்டாம் அவர்களைத் தேடி அவர்களால் தீட்டாக வேண்டாம் நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்” என்று கூறுகிறது திருப்பாடல் 32:24 “ஆண்டவருக்காக நம்பிக்கையோடு காத்திருப்போரே! நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள்” என்று கூறுகின்றது. நாம் வலிமையான, உறுதியான, இறைநம்பிக்கையோடு காத்திருக்கிறோமா? உள்ளத்து உணர்வுகளை இறைவன்பால் திருப்பி நம்பிக்கையில் உறுதிபெறுவோம். இந்த மன உறுதியோடு அடுத்த பகுதியில் உங்களைச் சந்திக்கும்வரை....

## போதைப்பொருள் அரக்கனை....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுகின்றன. மன அழுத்தத்திற்கு உட்படும் போது போதைப்பொருள் பாவனையாளர்கள் தற்கொலைக்கு முயல்வதும் அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் புனிதமான இரத்த உறவு முறைகளைப் புறம்தள்ளிப் பாலியல் வக்கிரச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் பலரின் வாழ்வு சீரழிக்கப்படுகின்றது.

வடபகுதி மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றது. என்பதை அண்மைக்காலப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவேபோதைப் பொருள் வர்த்தகத்திற்குஎதிராகஉரியநடவடிக்கைஎடுத்துஎமதுவடபகுதியைப் பாதுகாக்குமாறு சமூகத்தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் போன்றோரை மிகவும் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். ஒருசமூகத்தைஉடல்ரீதியாகவும்,உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், நலிவடையச் செய்கின்ற இப் போதைப் பொருள் வர்த்தகத்தையும், பாவனையையும், மக்கள் நல் வாழ்விற்குப் பொறுப்பாக இருக்கின்ற அரசியல் தலைமைகள் கூடிய கவனமெடுத்து எமது மக்களைக் காப்பாற்றும் படியாக யாழ் மறைமாவட்டப் பொதுநிலையினர் கழகம் கோரிக்கை விடுக்கின்றது.

## ஆண்டவர் அழைப்பின் 2ம் ஆண்டு நினைவுகூரல்

மலர்வு 30 . 04 . 1946



உதிர்வு 17 . 10 . 2020

### அமரர் யோசப்பின் தேவநாயகம் [தவம்]

“ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர் (தி.பா. 33:12b)

உமை இழந்த
ஈராண்டின் இடைவெளியில்
மனதோடு போராடும்
மறையாத ஞாபகங்கள்
நீர் விழியோடு
உம் நினைவு என்றென்றும்
மாறாது மறையாது அம்மா
இமைப்பொழுதின் அரை நொடியில்
உமை நினைக்காத கணமில்லை.

வேரற்ற மரங்களாய்
மாசற்ற உம் அன்பு மறுபடி
மலராதோ என ஏங்கி....
தூங்காத பல இரவுகளில்
கனக்கின்ற உம் பாசத்தின்
ஏக்கங்கள் வலிகளாய்
எமை கொல்கிறதே....

வார்த்தைகள் வந்து
முண்டியடிக்கும் உம் வலி தந்த
அனுபவத்தை வடித்துவிட....
அன்னையே !
அதை வரிகள் கொண்டு விளக்க
என்னால் முடியவில்லை...
அவை மூச்சுக்குள் முட்டிமுனகும்
முகாரிகள்.... இவையெல்லாம்
எதுவரை தாயே! அதுவரை
இத்துயர் வெல்ல வழியில்லை
அம்மா!

நித்திய வாழ்வினில் பயணிக்கும் எம் அன்புத் தாயே! உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெறத் தினமும் எமது செபத்திலும், திருப்பலிகளிலும் வேண்டுகின்றோம்.

இல 4A, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்

என்றும் உம் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
சகோதரிகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

AD 68

## 18 ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 04 - 1939



விண்ணில் 04 - 10 - 2004

### அமரர் சூசைப்பிள்ளை சாள்ஸ்

அன்புக்கு அர்த்தம் தந்து பண்புக்குப் பாடம் சொல்லி
பாசத்துக்கு நேசம் காட்டி ஆருயிர் துணையதை
தன்னுயிராய் எண்ணி ஈருயிரும் ஓருயிராய்
ஒன்றிணைந்து நம்மையெல்லாம்
நவரத்தினமாய் உலகாள ஆசான், அறிஞன்
ஆக்கி உன் தேகம் தேயக் கடலாண்டு
எம்மைக் கரைசேர்த்த கண்ணியவான் எங்கள்
காவல் தெய்வம் நீங்கள்
தந்த எண்ணிலா அன்புக்கு என்றும் நிகரில்லாத்
தாயான எம் தாய்க்கெல்லாம் தாயானவன் நீ
ஆண்டுகள் பதினெட்டு மூழ்கிப் போனாலும் ஆறாத
உன் பிரிவுக்கடலில் நித்தமும் மூழ்கித் தவிக்கின்றோம்
கண்ணீரில் தத்தளிக்கிறோம் தந்தையே
உன் பிரிவால் என்றும் எம் இதயக்கோவிலில்
நீரே ஐயா

5ம் வட்டாரம்,
மண்டைதீவு

பாசமுடன்
நினைவுகூரும்
அருட்தந்தை சா.ஜஸ்ரின்
(மகன்)

AD 67

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 . 11 . 1942



விண்ணில் 22 . 10 . 2021

அமரர்

### பஸ்ரியாம்பிள்ளை கயித்தாம்பிள்ளை

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்” (யோவான் 11:25)

கருணைக் கடலாகிய இறைவா! உம்மிலே நம்பிக்கை கொண்டு வாழ்ந்து
இறந்த அடியானின் ஆன்மாவிற்கு வான்வீட்டில் இடமளித்தருள
வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.

AD -70

பெரியவிளான்,
இளவாலை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 16 . 12 . 1971



விண்ணகம் 28 . 10 . 2017

### அமரர் பீற்றர் அன்ரன் ஜூட் றொபின்

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களாய் ஆர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம் ...

AD -69

உங்கள் பிரிவின் துயரால் கரைந்துருகும்
சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்

# கரித்தாஸ் செடேக் புதிய தேசிய இயக்குநர் யாழ் விஜயம்



கொழும்பு தேசிய கரித்தாஸ் செடேக் நிறுவனத்தின் புதிய இயக்குநர் அருட்பணி லூக் நெல்சன் பெரேரா அடிகள் கடந்த 05ஆம் திகதி யாழ் மறைமாவட்டத்திற்கு வருகை தந்து யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இங்கு நடைபெற்ற பல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தில் நிறுவன இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் இவருக்கான வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் உள்ள கொழும்புத்துறை, மணியந்தோட்டம், உதயபுரம், புதிய சோனகத்தெரு, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் உள்ள சுய முயற்சியாளர்களை நேரில் தரிசித்து அவர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்திற்கு சென்று அங்கு அமைக்கப்பட்ட கோழிப்பண்ணையைத் திறந்து வைத்ததுடன் நெவாட் வலைத் தொழிற்சாலையையும் தரிசித்தார்.

# குருநகரில் கத்தோலிக்க மூதாளர் சங்கம் அங்குரார்ப்பணம்





குருநகர்ப் பங்கிலுள்ள முதியவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட கத்தோலிக்க முதியோர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 05ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி A.J. யாவிஸ் அடிகளின் வழிநடத்தலில் இளையோர் மன்றத்தினரின் உதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் 50வரையான மூதாளர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அருட்பணி S.J. இம்மானுவேல் அடிகளும் அமல மரித்தியாகிகள் சபையை சேர்ந்த அருட்பணி அல்பன் இராஜசிங்கம் அடிகளும் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். முதியோர்களுக்கான மகிழ்வூட்டும் நிகழ்வுகளை திரு. கரன்சன் ஜெகன் அவர்கள் வழிப்படுத்தினார்.

# குமுழமுனையில் பிற மத உறவுகளுடன் நல்லிணக்க நிகழ்வு



பிற மத உறவுகளுடன் நல்லுறவை மேற்கொள்ளும் நோக்குடன் கிளிநொச்சி குமுழமுனை பங்கு இளையோர்களால் முன்னெடுக்கப்பட்ட இஸ்லாமிய மதத்தினருடனான நல்லிணக்க உறவுப்பாலம் நிகழ்வு நாச்சிக்குடா முகைதீன் பள்ளிவாசலில் கடந்த 7ம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி நிதர்சன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் குமுழமுனைப் பங்கு இளையோர்கள், முஸ்லீம் மௌலவி மற்றும் மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைப் பங்கில் வின்சென்ற் டி போல் திருவிழாவில் மூதாளர் கௌரவிப்பு



முல்லைத்தீவுப் பங்கில் புனித வின்சென்ற் டீ போல் சபையின் திருவிழாவும் மூதாளர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 02ஆம் திகதி பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட வின்சென்ற் டீ போல் மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி நேசநாயகம் அடிகள் திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி நிறைவேற்றினார். திருப்பலி நிறைவில் முதியோர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட மத்திய சபையின் அங்கத்தவர்கள் ஏனைய பந்திகளின் பிரதிநிதிகள் மற்றும் முல்லை புனித பேதுருவானவர் பந்தியின் முதியவர்கள், இளையோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் புதிய அங்கத்தவர்கள் இணைவு



பொதுநிலைப் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையினர் முன்னெடுத்த புனித பிரான்சிஸ் அசீசியாரின் திருவிழா கடந்த 04ஆம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் பொதுநிலைப் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை ஆன்மீக இயக்குநர் அருட்பணி அருள்தாசன் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி மவுலிஸ் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். பொதுநிலைப் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபைக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வுடன் அவர்களுக்கான தவஉடை மற்றும் உத்தரியம் அணிவிக்கும் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# யாழ் மாவட்ட சம்பியனானது புனித பத்திரிசியார் கல்லூரியின் 14 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணி



யாழ் மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய 14 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியுடன் மோதியது. குறிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத சூழ் நிலையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தண்ட உதைமூலம் ( Penalty) நடத்தப்பட்டது. இதில் 04:03. என்ற கோல் கணக்கில் சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனானது. இத்தொடரின் சிறந்த உதைபந்தாட்ட வீரனாக புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த அ. விக்மிலன் தெரிவு செய்யப்பட்டார்.

# குருநகர் – வலைப்பாடுப் பீடப்பணியாளர்களின் கள அனுபவம்



யாழ் குருநகர்ப் பங்கு பீடப்பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட கள அனுபவ பயணம் கடந்த 01ஆம் திகதி இடம்பெற்றது.

வலைப்பாட்டுப் பங்கிற்கு கள அனுபவப் பயணம் மேற்கொண்ட இவர்கள் அங்குள்ள சில இடங்களைப் பார்வையிட்டதுடன் வலைப்பாட்டுப் பங்கு பீடப்பணியாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு அவர்களுடன் நட்பு ரீதியான உதைபந்தாட்ட விளையாட்டிலும் பங்குபற்றினார்கள்.

இந்நிகழ்வில் இரு பங்குகளையும் சேர்ந்த 100 வரையான பீடப்பணியாளர்கள் இணைந்திருந்தனர்.

# மானி. அன்னாள் ஆலயப் பீடப்பணியாளர்கள் ஒன்று கூடல்



மானிப்பாய் புனித அன்னாள் ஆலய முதன்மை வானதூதர் பீடப்பணியாளர் சபையினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 02ஆம் திகதி நடைபெற்றது. முதன்மை வானதூதர் பீடப் பணியாளர்களின் ஏற்பாட்டில் பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் அடிகளின் தலைமையில் காலைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியில் மறையுரை ஆற்றிய பங்குத்தந்தை மனிதரின் புகழ்ச்சியைத் தேடாது இறைவனின் "நல்ல பணியாளரே" என்று பாராட்டுப் பெற நாம் தியாக உணர்வோடு பணி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். திருப்பலியைத் தொடர்ந்து ஆலயப் பக்திச் சபைப் பிரதி நிதிகளுடனான விருந்துபசார நிகழ்வு நடைபெற்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.